# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108547

1. District மாவட்டம்: சிவகங்கை  PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு  Year ஆண்டு: 2021  FIR No. (மு.த.அ. எண்): 7/2021  Date நாள்: 07.09.2021

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனைச் சட்டம்  Sections பிரிவுகள்: 167, 409

   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம், 1988  Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c)

   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல்: 01.04.2011  Date to நாள் வரை: 31.03.2013

   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 07.09.2021  Time நேரம் : 10.30 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 07.09.2021  Time நேரம் : 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம் 65 கி.மீ வடகிழக்கு.

   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் இ. மணிமன்னன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இளையாண்டி

   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 17.05.1972  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் துணைக் கண்காணிப்பாளர்  (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, சிவகங்கை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1) திரு. M. தேவகுமார், முன்னாள் மருத்துவ அலுவலர், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, காரைக்குடி.
   2) திரு. R. கோவிந்தசாமி, அலுவலக கண்காணிப்பாளர், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, காரைக்குடி.
   3) திரு. S. சங்கரலிங்கம், அலுவலக கண்காணிப்பாளர், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   முதனிலை விசாரணை (Preliminary Enquiry) செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் முதன்மை மருத்துவ அலுவலராகப் பணிபுரிந்து தற்போது கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் மருத்துவமனை கண்காணிப்பாளராகப் பணிபுரியும் திரு.M.தேவகுமார் மற்றும் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அலுவலக கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து தற்போது சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து வரும் திரு. R.கோவிந்தசாமி மற்றும் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அலுவலக கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து தற்போது சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இளநிலை நிர்வாக அலுவலராகப் பணிபுரிந்து வரும் திரு. S.சங்கர் விசுவாசம் ஆகியோர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 விதி எண்.17(A)(1)ன்கீழ் முறையான வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள Government Letter (D) No.622, Health and Family Welfare (K2) Department,

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed M.CHANDRAN Rank Inspr., VACB to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.09.2021 at 11.45 hrs

Name: பெயர் இ.மணிமன்னன்
Rank: நிலை காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு - பிரிவு, சிவகங்கை.

சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.7/2021 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி—

Secretariat, Chennai, dated 30.04.2021 ன்படி முன் அனுமதி பெற்று, இன்று 07.09.2021ம் தேதி 11.00 மணிக்கு நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமுனா எண். மு.வி 204/2018/MED/SG, நாள் 31.08.2021 நமுனாவில் கண்ட உத்தரவின்படி காலம் 7ல் கண்ட எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 167, 409 மற்றும் சட்டப்பிரிவுகள் 13(2) உ/இ 13(1)(c) ஊழல் தடுப்பு சட்டம், 1988ன் படி சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.7/2021-ன்படி கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.

குற்ற அலுவலர்-1 திரு.M.தேவகுமார், M.B.B.S., D.Ortho, என்பவர் 22.04.2020ம் தேதி முதல் கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் மருத்துவமனை கண்காணிப்பாளராக தற்போது பணிபுரிந்து வருகிறார். இதற்கு முன்னர் இவர் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் கடந்த 09.03.2011 முதல் 24.10.2016 வரை முதன்மை மருத்துவ அலுவலராக பணியாற்றியுள்ளார். குற்ற அலுவலர்-2 R.கோவிந்தசாமி என்பவர் தற்போது 22.06.2018 முதல் சிவகங்கையில் உள்ள அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இதற்கு முன்பு இவர் 31.07.2008 முதல் 30.09.2011 வரை சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்துள்ளார். குற்ற அலுவலர்-3 திரு. S.சங்கர் விசுவாசம் என்பவர் தற்போது 24.05.2017ம் தேதி முதல் சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் இளநிலை நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இதற்கு முன்னர் இவர் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் 04.01.2012 முதல் 15.07.2013 வரை அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்துள்ளார். இவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(c)ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

மேற்படி 1,2,3 எதிரிகள் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அமைந்துள்ள அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்த காலமான 01.04.2011 முதல் 31.03.2013 வரையிலான காலத்தில் குருதி விற்பனை தொகை, எக்ஸ்ரே பிலிம் விற்பனை தொகை ஆகியவற்றின் மூலமாக மருத்துவமனைக்கு வரப்பெற்ற வருமானம் பற்றிய விபரத்தினை முறையாக பதிவேடுகளில் பதிவுசெய்து அரசு மருத்துவமனை வங்கிக்கணக்கில் ரூ.5,76,111/-ஐ செலுத்தாமல் இரண்டு வருடங்களாக குற்ற அலுவலர்கள் M.தேவகுமார், முதன்மை மருத்துவ அலுவலர், R.கோவிந்தசாமி, நிர்வாக அலுவலர், S.சங்கர் விசுவாசம், இளநிலை நிர்வாக அலுவலர் ஆகியோர் தங்கள் கையிருப்பில் மேற்படி ரொக்கத்தினை வைத்திருந்து, மேற்படி தொகையில் ரூ.4,76,111/-ஐ சலான் எண்.156, நாள் 31.07.2013ன்படி அரசு வங்கிக்கணக்கில் மொத்தமாக ஒரே தலைப்பில்

செலுத்தியுள்ளார்கள் மீதி தொகை 1 லட்சத்தினை வங்கிக்கணக்கில் செலுத்தாமல் கையாடல் செய்துள்ளதாக எழுந்த குற்றச்சாட்டுகளின் பேரில் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் நடத்தப்பட்ட முதல்நிலை விசாரணையில் காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு 01.04.2011 முதல் 31.03.2013 வரையில் வரப்பெற்ற வருமானத்தினை முறையாக மருத்துவமனை வங்கிக்கணக்கில் செலுத்தாமல் குற்ற அலுவலர்கள் 1,2,3 ஆகியோர் கையாடல் செய்து முறைகேட்டில் ஈடுபட்டுள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கருவூல விதிகள் தொகுப்பு தொகுதி–1, கருவூல விதி 7(1) மற்றும் தமிழ்நாடு கருவூல விதிகள் தொகுப்பு பிரிவு–13 ஆகியவற்றின்படி, அரசு வரவினங்கள் உடனுக்குடன் அரசு கணக்கில் செலுத்தப்படவேண்டும். அதன்படி காரைக்குடியில் மாவட்ட தலைமை மருத்துவமனையில் குருதி விற்பனை மற்றும் எக்ஸ்ரே விற்பனைத் தொகையை அந்த அரசு தலைப்புகளில் பெற்ற உடனே அலுவலக கண்காணிப்பாளர் உரிய தலைப்பில் மருத்துவ அலுவலரின் கையொப்பம் பெற்று செலுத்தவேண்டும். அதற்குரிய Cash Receipt Book மற்றும் செலுத்துச் சீட்டு உட்பட ஆவணங்களை அலுவலக கண்காணிப்பாளரிடம் பராமரிக்க வேண்டும். இதனை மருத்துவ அலுவலர் கண்காணிக்க வேண்டும். பொதுமக்களிடமிருந்து பெறப்படும் குருதி விற்பனைத் தொகை மற்றும் எக்ஸ்ரே பிலிம் விற்பனைத் தொகையை வேறு அலுவலக செலவினங்களுக்கு பயன்படுத்தவோ, ரொக்க கையிருப்பாகவோ வைத்திருக்கக்கூடாது. அரசு மருத்துவமனையில் அலுவலக செலவுகளான ஜெராக்ஸ் எடுத்தல், Transport கட்டணம் உள்ளிட்ட செலவினங்களை மருத்துவமனையில் உள்ள நிரந்தர முன்பணம் ரூ.2000/–லிருந்து எடுத்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும். இந்த செலவினங்களுக்கான வவுச்சரை காசாக்கம் செய்து நிரந்தர முன்வைப்புத் தொகையில் (Permanent Advance Amount) வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட விதிகளின்படி காரைக்குடி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் குருதி விற்பனை செய்யும் வருவாயை கணக்கு தலைப்பு எண்.021901800AG0207ல் கருவூலத்தில் செலுத்த வேண்டும். X-Ray Film விற்கப்படுவதன் மூலம் கிடைக்கும் வருவாயை கணக்கு தலைப்பு எண்.020101020AA0109-லும், ஊர்திக் கட்டணம் மூலம் கிடைக்கும் வருவாயை கணக்கு தலைப்பு எண்.021001800AG0309-லும் கருவூலத்தில் செலுத்த வேண்டும். அலுவலக கண்காணிப்பாளர் மேற்படி தொகையை கருவூல செலுத்து சீட்டில் மருத்துவமனை கண்காணிப்பாளர்/முதன்மை மருத்துவ அலுவலரிடம் கையொப்பம் பெற்று அரசு கணக்கில் செலுத்த வேண்டும்.

காரைக்குடி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையின் மருத்துவ அலுவலர் பெயரில் காரைக்குடியில் உள்ள பாரதஸ்டேட் வங்கியில் சேமிப்பு கணக்கு எண்.10968330241 பராமரிக்கப்பட்டு வருகிறது. ரொக்க ரசீதுகள் மூலம் கிடைக்கப் பெற்ற தொகை மேற்படி வங்கிக்கணக்கில் உடனுக்குடன் செலுத்தப்பட வேண்டும். ரொக்க ரசீதுகளின்படி 01.04.2011 முதல் 31.03.2013 வரை குருதி விற்பனை செய்த மொத்த தொகை ரூ.6,09,500/- ஆகும் மற்றும் X-Ray மூலம் நோயாளிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற தொகை ரூ.62,500/- ஆகும். ஆனால் ரொக்க ரசீதுகள் மூலம் கிடைக்கப் பெற்ற தொகைகள் உடனுக்குடன் வங்கிக்கணக்கில் செலுத்தப்படாமல் கையிருப்பில் வைக்கப்பட்டு இருந்துள்ளது எனது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

ந.க.எண்.10060/தணி/2013, நாள்.19.09.2013 நாளிட்ட சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநரக நிதிக்கட்டுப்பாட்டாளர் அவர்களின் ஆணையின்படி, இராமநாதபுரம் மண்டல தணிக்கை குழுவினரால் காரைக்குடி அரசு மருத்துவமனையில் 01.04.2011 முதல் 31.03.2013 வரையிலான காலத்திற்கு இராமநாதபுரம் மண்டல தணிக்கை குழு உதவி கணக்கு அலுவலர் அவர்கள் தணிக்கை மேற்கொண்டு சமர்ப்பித்த ந.க.எண்.110/மதகு/2013, நாள் 31.12.2013ன் படி தணிக்கை காலத்தில் ரொக்கப்பதிவேட்டில் ரொக்க ரசீது புத்தகத்தின்படி 01.04.2011 அன்று இருப்புத் தொகை ரூ.86,122/- ஆகும். அத்தொகையினை உடனடியாக அரசு கணக்கில் செலுத்தாமல் மருத்துவ அலுவலர் தன் இருப்பில் வைத்துக்கொண்டு, அதனைத் தொடர்ந்து பெறப்படும் தொகையினையும் அரசுக்கணக்கில் உடனுக்குடன் செலுத்தாமல் இருப்பில் வைத்து, 31.03.2013ன்படி மொத்த தொகை ரூ.5,34,605 ஆக உள்ளது. 29.07.2013 அன்று ரொக்க பதிவேட்டின்படி இருப்புதொகை ரூ.5,76,111/-ஆகும். 31.07.2013 அன்று மேற்படி முழு தொகையினையும் சலான் எண்.156, நாள் 31.07.2013 ன்படி ரூ.4,76,111/- ஒரே தவணையாக செலுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட செயல் அரசு விதிமுறைகளை மீறியதாகும் என்றும், 1) 01.04.2011 முதல் 29.07.2013 வரை ரொக்க ரசீது புத்தகத்தின்படி பெறப்பட்ட தொகையினை அரசு கணக்கில் செலுத்தவில்லை 2) பெறப்பட்ட தொகையினை வங்கி இருப்பில் வைக்காமல் ரொக்கமாக இருப்பில் வைத்துள்ளார்கள் 3) இருப்பில் உள்ள மொத்த தொகையினை செலுத்தாமல் ரூ.1,00,000/- குறைவாக செலுத்தியுள்ளார்கள் 4) பல தலைப்புகளில் அரசுக்கு செலுத்தவேண்டிய தொகையை ஒரே தலைப்பில் செலுத்தியுள்ளார்கள் 5) பெறப்பட்ட தொகையை அரசுகணக்கில் செலுத்தாமல் இருப்பில் வைத்திருந்ததால் அரசுக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது என தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி செயல்களுக்கு குற்ற அலுவலர்கள் 1,2,3 ஆகியோர் காரணமாக இருந்துள்ளனர்.

மேலும் ரொக்க கணக்கு புத்தகத்தில் 29.07.2013 இருப்புதொகை ரூ.5,76,111/- என உள்ளதில் 31.07.2013 அன்று தொகை ரூ.4,76,111/-னை அரசு கணக்கில் செலுத்தியது போக மீதமுள்ள இருப்புத்தொகை ரூ.1,00,000/-ல் இருந்து

05.08.2013 தேதியில்

சலான் எண்.92 – ரூ.762/– கணக்கு தலைப்பு எண்.004000102AC0006

சலான் எண்.93 – ரூ.46,714/– கணக்கு தலைப்பு எண்.021001800AG0309

சலான் எண்.94 – ரூ.1428/– கணக்கு தலைப்பு எண்.004000102AC0006

சலான் எண்.95 – ரூ.9,850/– கணக்கு தலைப்பு எண்.021001800AG0207

சலான் எண்.96 –ரூ.5,250/– கணக்கு தலைப்பு எண்.021001800AG0207-ன்படி

மொத்தம் தொகை ரூ.64,004/–னை முதன்மை மருத்துவ அலுவலர் திரு.தேவகுமார், அலுவலக கண்காணிப்பாளர் திரு.சங்கர் விசுவாசம் ஆகியோரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. சங்கர் விசுவாசம் பணிமாறுதலாகி செல்லும் போது மீதி தொகை ரூ.35,996/–க்கான ஈடுசெய்யப்படாத செலவுச் சீட்டுக்களை 05.08.2013 அன்று அலுவலகக் கண்காணிப்பாளராக பொறுப்பேற்ற G.அருணாச்சலம் என்பவரிடம் ஒப்படைத்துள்ளார். 12.11.2013 அன்று மேற்படி தொகையில் ரூ.4987/–னை செலான் எண்.103ன்படி கணக்கு எண்.021001800AG0207ல் அரசு கணக்கில் G.அருணாச்சலம் என்பவரிடம் செலுத்தப்பட்டுள்ளது. மொத்த இருப்பு தொகை ரூபாய் 1லட்சத்தில் ரூ.68,991/– (ரூ.64,004+ரூ.4,987) மட்டும் அரசு கணக்கில் செலுத்தப்பட்டு மீதம் உள்ள தொகை ரூ.31,009/– அரசு கணக்கில் செலுத்தப்படாமல் ஈடுசெய்யப்படாத 53 செலவுசீட்டுகளாக குற்ற அலுவலர்கள் 1,2,3 ஆகியோர் வைத்துள்ளனர்.

அலுவலக நடைமுறைகளின்படி ரசீது புத்தகத்தில் பணம் வரவு வைத்தவுடன் அதை அரசு கணக்கில் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் 01.04.2011 முதல் 31.03.2013 வரையிலான தணிக்கை காலத்தில் தணிக்கை அறிக்கையின்படி 31.03.2013 அன்று மொத்த இருப்புத் தொகை ரூ.5,34,605/–னை குற்ற அலுவலர்கள் முறையாக அரசுகணக்கில் உடனுக்குடன் செலுத்தாததால் அரசுக்கு வருமான இழப்பு மற்றும் வட்டி இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில்

குற்றச்சம்பவம் நடைபெற்ற காலத்தில் பணிபுரிந்த முதன்மை மருத்துவ அலுவலர் திரு.தேவகுமார், அலுவலக கண்காணிப்பாளராக 01.04.2011 முதல் 31.09.2011 வரை பணபுரிந்த திரு.கோவிந்தசாமி மற்றும் 04.01.2012 முதல் 04.08.2013 வரை அலுவலக கண்காணிப்பாளராக பணிபுரிந்த திரு.சங்கர் விசுவாசம் ஆகியோர் பொறுப்பாவார்கள். மேலும் குற்ற அலுவலர்கள் 1,2,3 ஆகியோர் ஒரு பொது ஊழியருக்குரிய தகுதியிலிருந்து காரைக்குடி அரசு தலைமை மருத்துவமனையில் பணிபுரிந்த காலமான 01.04.2011 முதல் 31.03.2013 வரையிலான காலக்கட்டத்தில் குருதி விற்பனை தொகை, எக்ஸ்ரே பிலிம் விற்பனைத் தொகை மூலமாக கிடைத்த வருமானம் ஆகியவற்றை குற்றம் என்று தெரிந்தே அதற்குரிய ஆவணங்களை சரியான முறையில் தயார் செய்து உடனுக்குடன் அரசுக்கணக்கில் செலுத்தாமல் தங்களது பொறுப்பில் வைத்துக்கொண்டு அரசுக்கு பண

இழப்பு ஏற்படுத்தும் விதத்தில் செயல்பட்டு தெரிந்தே குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்யும் குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர.

மேலும் குருதி விற்பனைத் தொகை, எக்ஸ்ரே பிலிம் விற்பனைத் தொகை ஆகியவற்றின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகையிலிருந்து மருத்துவமனையின் அன்றாட சிறு சிறு செலவுகளக்கு தன்னிச்சையாக விதிமுறைகளை மீறி பயன்படுத்தியும், அந்த செலவுச் சீட்டுக்களை உடனுக்குடன் காசாக்கம் செய்யாததால் காரைக்குடி, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ரூ.31,009/- பண இழப்பினை குற்ற அலுவலர்கள் 1,2,3 ஆகியோர் ஏற்படுத்தியுள்ளனர் என்பது எனது முதல்நிலை விசாரணையில் தெரிய வருகிறது.

எனவே குற்றம் சாட்டப்பட்ட குற்ற அலுவலர்கள் 1,2,3 ஆகியோர்கள் இ.த.ச சட்டப்பிரிவுகள் 167, 409 மற்றும் 13(2) உ/இ 13(1)(c) ஊழல் தடுப்பு சட்டம் 1988ன் படி தண்டிக்கத்தக்க குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கையை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

7.9.21

DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.